# தொல்காப்பியத்தில் கிளைமொழி வழக்குகளின் ஏற்புகள் பற்றிய சமுதாய - மொழியியல் ஆய்வு

**ஷிறோமி மோகன்**
விரிவுரையாளர்,
மொழியியல் ஆங்கிலத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
*shiromimohan@yahoo.com*

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் மொழியினை அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்துள்ள முதல் இலக்கண நூலாக தொல்காப்பியம் விளங்குகின்றது. தொல்காப்பியத்தின் வழிகாட்டலிலேயே பின்வந்த இலக்கண நூல்கள் கால வளர்ச்சிக்கு ஏற்றவாறு மொழியில் ஏற்பட்ட மாற்றங்களை கருத்தில் கொண்டு இலக்கணங்களை வழங்கியுள்ளன. குறித்தவொரு மொழியானது அம்மொழி பேசும் மொழியாளர்களின் பரம்பல்களுக்கு ஏற்ப பல்வேறு கிளைமொழிகளை கொண்டிருக்கும். இவ்வாறான சூழலில் அம்மொழிக்கான இலக்கணங்கள் வகுக்கப்படும்போது அம்மொழியின் கிளைமொழிகளின் பண்புக் கூறுகளையும் உள்வாங்கி இலக்கணம் படைப்பது நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்ற கருத்து நிலவுகின்ற சூழலில் தொல்காப்பியத்தில் மக்களது பேச்சு வழக்குகள் குறிப்பாக தமிழ்க்கிளைமொழி வழக்குகளுக்கான ஏற்புகள் இடம்பெற்றுள்ளனவா என்பதனை ஆராய்ந்து, அவற்றுக்கான சான்றாதாரங்களை பதிவு செய்யும் நோக்கத்துடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வகையில் இவ்வாய்வுக்குரிய தரவுகள் தொல்காப்பிய எழுத்ததிகார, சொல்லதிகார உரைநூல்கள் மற்றும் தமிழ்மொழிக்கான ஆய்வுக்கட்டுரைகள் ஊடாகப் பெறப்பட்டு சமுதாய மொழியியல் அணுகுமுறையில் கிளைமொழி வழக்குகளுக்கான ஏற்புகள் பற்றிய சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** தொல்காப்பியம், கிளைமொழி வழக்குகள், சமுதாய மொழியியல், இலக்கண ஆய்வுகள்.

**அறிமுகம்**

திராவிட மொழிகளுக்கான பண்பட்ட இலக்கணத்தை பறைசாற்றுகின்ற அறிவியலடிப்படையிலமைந்த இலக்கண நூலே தொல்காப்பியம். இந்நூலிற்கான உரை விளக்கங்கள் பின்வந்த இலக்கண ஆசிரியர்களால் நன்கு ஆராயப்பட்டு மொழியியல் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒப்பிட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை கிளைமொழி என்பது ஒரு குறிப்பிட்ட பேச்சு மொழியின் வகையாகும். அதாவது பல தனிமனித பேச்சு வழக்குகளில் உள்ள கருத்துப்-பரிமாற்றத்திற்கு தடையில்லாத சிறுசிறு வேறுபாடுகள் நீக்கப்பட்டு பெரும்பான்மையான ஒற்றுமையின் அடிப்படையில் ஒருங்கிணைந்து ஒரு கிளைமொழி என்ற நிலையினைப் பெறுகின்றது என கோ. சீனிவாசவர்மா அவர்கள் குறிப்பிட்டுவதுடன், பேச்சுமொழியின் படிமுறைகளைப் பின்வரும் வரைபடம் ஊடாக எளிமையாக விளக்கியிருக்கின்றார்.

கிளைமொழிகள்

- வட்டார கிளைமொழிகள்
- சமூக கிளைமொழிகள்
- கால கிளைமொழிகள்

தனி மனித பேச்சுக்கள்

மொழி

பேச்சு நடை + பேச்சு முறை

இவ்வரைபட விளக்கத்தின்படி குறித்தவொரு மொழியின் பல்வேறு பிரதிநிதிகளாக விளங்கும் கிளைமொழிகள் அம்மொழியின் நிலைப்பிற்கு மிக முக்கிய அங்கங்களாகும்.

பொதுவாக மரபிலக்கணக்காரர்கள் பேச்சு மொழியினை அங்கீகரிப்பதில்லை என்ற கருத்துக்கள் காணப்படுகின்ற நிலையில் தமிழ் மொழிக்கான எல்லா காலத்தவர்களாலும் ஆராயப்படக்கூடிய தகமை பெற்ற இலக்கண நூலாக விளங்கும் தொல்காப்பியத்தில் எத்தகைய இடங்களில் கிளைமொழி வழக்குகள் மீது கவனம் செலுத்தப்பட்டு ஏற்புகள் இடம்பெற்றிருக்கின்றன என்பது இவ்வாய்வின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளன.

**ஆய்வின் ஊடாக தொல்காப்பிய இயல்களிலிருந்து கண்டறியப்பட்ட கிளைமொழி வழக்குகளுக்கான ஏற்புகள்**

தொல்காப்பியத்தில் கிளைமொழி என்ற சொல் இடம்பெறாவிட்டாலும் மொழிகளின் பேச்சு வழக்குகள் என்ற ரீதியில் பல்வேறு இடங்களில் சுட்டிக்காட்டப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டமைக்கான சான்றாதாரங்கள் இவ்வாய்வின் போது தொல்காப்பிய எழுத்ததிகார பிறப்பியல் பகுதியிலிருந்து சொல்லதிகார எச்சவியல் பகுதிவரை பெறப்பட்டுள்ளன.

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் சார்பெழுத்துக்கள் பற்றிக்கூறும் பாடலில் அவை மூன்று எனக்கூறி அவற்றின் பிறப்பிடம் பற்றிக் கூறுகின்ற போது,

"சார்ந்துவரின் அல்லது தமக்கியல் பிலவெனக்
தேர்ந்து வெளிப்படுத்த ஏனைய மூன்றும்
**தத்தம் சார்பின் பிறப்பொடு சிவணி**
ஒத்த காட்சியின் தமக்கியல் பியலும்". (தொல். எழு. 101)

இங்கு நூற்பாக்களுக்கான உரைகளில் ஆசிரியர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும்

சார்பெழுத்து என்பது முதல் எழுத்துக்களைப்போல் தனித்தியங்கும் தன்மையின்றி முதல் எழுத்துக்களை துணையாகக்கொண்டு இயங்கும் தன்மையுடையவை என்பதனையே "சார்ந்து வரல் மரபு" என்றுள்ளார். இதனடிப்படையில் பார்க்கின்றபோது **சார்பெழுத்துக்களைக் கணித்தலென்பது மக்கள் பேச்சின் போதான உச்சரிப்பு மாறுபாடுகளை கவனித்தலாகும்.** இவ்வாறாக தொல்காப்பியர் தனது ஆரம்ப அதிகாரத்திலேயே மாற்றொலி உச்சரிப்புக்களைச் சார்பெழுத்துக்களாக சுட்டிக்காட்டுவதன் ஊடாக அவர் மக்களது பேச்சுவழக்குகளின் உச்சரிப்புக்களைச் சமுதாய மொழியியல் நோக்கில் கவனித்து ஏற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பிய சொல்லதிகாரத்தில் பெயரியல் பகுதியின் 155வது பாடலில்,

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"

எனக் கூறயிருப்பதன் ஊடாக மொழியில் பயின்று வருகின்ற பெயர், வினை, இடை, உரி என அனைத்துச் சொற்களுமே ஏதோவொரு பொருள் கொண்டே தொழிற்படும் என்ற ஏற்றுக் கொள்ளலை வெளிப்படுத்தியுள்ளார். அதாவது இங்கு பொருள் கொண்டு தொழிற்படுகின்ற வழக்கில் பயன்படுத்தப்படும் சொற்கள் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பிய சொல்லதிகாரத்தின் பெயரியல் பகுதியில் சொற்களின் இயல்பு பற்றிக் கூறும் 156வது பாடலில்,

"பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லினாகும் என்மனார் புலவர்"

எனக் கூறுவதன் வாயிலாக மொழியில் காணப்படும் சொல்லின் மூலமாகத்தான் அச்சொல்லும், அதுகுறிக்கும் பொருளும் உணர்த்தப்படுகின்றன என்றுள்ளார். இவ்வடிகள் ஊடாக மொழியில் காணப்படும் எந்தவொரு கிளைமொழியாக இருந்தாலும் அவ்வழக்குச் சொற்களில் சொன்மையும் பொருளும் உணர்த்தப்படுமாயின் அவை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவையே என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறமுடியும்.

சொல்லதிகாரத்தில் பெயர்ச்சொற்களின் இலக்கணம் பற்றிக்கூறும் பாடல்களில் உயர்திணைப் பெயர்களைப் பற்றி இயம்பும் 165வது பாடலில்,

"நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள் பெயரே
**பல்லோர்க்** குறித்த முறைநிலைப் பெயரே
**பல்லோர்க்** குறித்த சினைநிலைப் பெயரே
**பல்லோர்க்** குறித்த திணைநிலைப் பெயரே
கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே
இன்றிவ ரென்னும் எண்ணியற் பெயரோடு
அன்றி யனைத்தும் அவற்றியல் பினவே...."

என்றவாறாக நிலப்பெயர் முதலாக பாலறிவந்தவை உயர்திணை பெயர்களாக சொல்கின்றபோது "பல்லோர்" எனக் கூறப்படுவது "தமிழ்மொழி பேசுகின்ற பலர்" என எடுத்துக்கொண்டால் இங்கும் தமிழில் பல கிளைமொழி வழக்காளர்களால் பயன்படுத்தப்படுகின்ற சொற்கள் என்றவாறாக உள்வாங்கப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்படுகின்றது.

சொல்லதிகார பெயரியலில் உயர்திணைஈறு அமைந்த விரவுப் பெயர்கள் பற்றிக் 196வது பாடலில் குறிப்பிடுகின்ற போது,

"இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுட் கிளக்கும்
இயற்பெயர்க் கிளவி யுயர்திணை சுட்டா
நிலத்துவழி மருங்கின் தோன்ற லான"

என்பதற்கு செய்யுள்களில் கருப்பொருள் மேல்வைக்கப்படும். இரு திணைக்கும் உரிய பெயரானது உயர்திணை உணர்த்தாது. அவை அவ்வவ் நிலத்துவழி அஃறிணை பொருளில் வழங்கப்படுவன என உரை வழங்கப்படுகிறது. இப்பாடலிற்கு உரைகள் மூலமாக விளங்கிக்கொள்வது யாதெனில், இயற்பெயர்கள் என்பன அந்தந்த நிலத்துக்குரியவை. கருப்பொருள் எந்த நிலத்தைப்பற்றிப் பேசுகின்றதோ அதன்படியே அவற்றின் பெயர்களும் அந்நிலத்திற்குரியனவாய் வழங்கி வருவன என கூறப்பட்டுள்ளதன்படி தொல்காப்பியரால் ஒவ்வொரு நிலத்திற்குமுரிய பேச்சு வழக்குகள் கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன என்பதனை நிறுவமுடிகிறது.

சொல்லதிகார, உரியியலில் அதன் பொதுஇலக்கணம் பற்றிக் கூறுகின்றபோது (தொல். சொல். 297)

"உரிச்சொற்கிளவி விரிக்குங் காலை
இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்
பெயரினும் வினையினும் மெய் தடுமாறி
**ஒரு சொல் பலபொருட்குரிமை தோன்றினும்**
**பலசொல் ஒரு பொருட்குரிமை தோன்றினும்**
**பயிலாதவற்றை பயின்றவை சார்த்தித்**
**தத்தமரபிற் சென்றுநிலை மருங்கின்**
எச்சொல்லாயினும் பொருள் வேறு கிளத்தல்"

இப்பாடல் வரிகளின்படி, தமிழ் மொழியிலே பயின்று வருகின்ற சொற்களானவை, பல சொற்கள் ஒரு பொருளிலும், ஒரு சொல் பல பொருளிலும் அந்தந்த மரபுகளிற்கு ஏற்றபடி வழக்குகள் பயிலப்படுகின்றன. அவை சூழ்நிலைக்கு ஏற்ப தெரிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டியவை என்பதனையே தொல்காப்பியரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இங்கும் கிளைமொழி வழக்குகளுக்கான ஏற்புகள் பற்றியே பேசப்பட்டுள்ளது.

மேலும் தொல்காப்பியத்தின் எட்டாவது இயலான உரியியலானது பிற்காலத்தில் நிகண்டுகள், ஒருமொழி அகராதிகள், இருமொழி அகராதிகள், பன்மொழி அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் போன்றன தோன்றுவதற்கான முன்னோடி இயலாக அமைந்துள்ளது. இவை மொழிகளில் பயின்றுவருகின்ற சொல் வளங்களைப் பதிவுசெய்து பேணிப்பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்திலமைந்தவையாகும். எனவே உரியியல் என்பதன் ஆரம்பம் தமிழ்க் கிளைமொழி வழக்குகளில் காணப்பட்ட, பயில்வதற்குரிய சொற்களை ஏற்றுக்கொண்டு பேணிப்பாதுகாக்க விளைந்ததன் விளைவாகும்.
தொல்காப்பிய சொல்லதிகார ஒன்பதாவது இயலான எச்சவியலானது எஞ்சியிருக்கும் சொல்லிலக்கணங்களையெல்லாம் தொகுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. இதில் செய்யுளீட்டச் சொற்களின் வகைப்பாடுகளை 397வது பாடலில் கூறும்போது,

"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று
அனைத்தும் செய்யுள் ஈட்டச் சொல்லே"

எனக்கூறப்பட்டுள்ளது. இங்கு செய்யுளீட்டச்சொற்களாக திசைச்சொற்களும் உள்ளடக்கப்பட்டமையானது, இன்றைய கிளைமொழி வழக்குகளின் ஏற்புகளையே குறித்து நிற்கின்றது.

மேலும் இயற்சொல், திரிசொல் தவிர்ந்த திசைச்சொற்கள் மற்றும் வடசொற்களில் சான்றோர்களால், எவை செய்யுமாறு கண்டுகொண்டு கூறப்பட்டுள்ளனவற்றையே பயன்படுத்த வேண்டும் என்பது உரையாசிரியர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திசைச்சொல் பற்றி சொல்லதிகார 400வது பாடலில்,

"சொற்றமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச் சொற் கிளவி"

அதாவது செந்தமிழ் பேசப்படும் நிலத்தை சேர்ந்ததாக பன்னிரெண்டு நிலைகளிலும் தத்தமக்கென வழக்கிலிருக்கின்ற பொருள் விளங்கும் சொறகளே திசைச்சொற்கள் என பொருள் கூறப்படுகின்றது. இங்கு பன்னிரு நிலங்கள் தொடர்பில் உரையாசிரியர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்பட்டாலும் தொல்காப்பியத்தில் கிளைமொழிவழக்குகளுக்கான அங்கீகாரம் வெளிப்படையாகவே கிடைக்கப்பெற்றுள்ளது.

அடுத்து சொல்லதிகார எச்சவியலின் 403வது பாடலில்,

"அந்நாற் சொல்லூந் தொடுக்குங் காலை
வலிக்கும் வழி வலித்தும் மெலிக்கும் வழி மெலித்தும்
விரிக்கும் வழி விரித்தலும் தொகுக்கும் வழி தொகுத்தலுதும்
நீட்டும் வழி நீட்டலும் குறுக்கும் வழி குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர்"

அதாவது இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்ற நால்வகைச் சொற்களையும் செய்யுள்களாகத் தொகுக்கும்போது பாடலில் கூறப்பட்டுள்ளவாறு வலித்தல், மெலித்தல், விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் என்ற அறுவகை விவகாரங்களில் தேவையானவை செய்யப்பட்டு செய்யுளின்பம் பெறக்கூடியவாறு தொடுக்கப்படல் வேண்டும் என இயம்பப்பட்டுள்ளது.

எனவே செய்யுள்கள் தொடுக்கப்படும்போது திசைச்சொற்களையும் உள்ளடக்கியே செய்யப்பட வேண்டிய விகாரங்கள் செய்து செய்யுள்கள் படைக்கப்படல் வேண்டும் என்பது தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது எனலாம்.

இவ்வாறாக தொகுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தொல்காப்பியத்தில் கிளைமொழி வழக்குகளுக்கான ஏற்புகள் இடம்பெற்றுள்ளமைக்கான சான்றுகள் தொகுக்கப்பட்டுள்ளன.

## முடிவுரை

இவ்வாய்வின் நோக்கத்தில் குறிப்பிட்டது போல தமிழ்மொழிக்கான பண்பட்ட இலக்கண நூலான தொல்காப்பியத்தில் தமிழ்மொழியின் கிளைமொழி வழக்குகளும் இலக்கியப் படைப்புகளின்போது கவனத்தில் கொண்டு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவையே என்பதற்கான சான்றாதாரங்கள் எழுத்ததிகாரம், சொல்லதிகார இயல்களிலிருந்து கண்டறிந்து முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் ஆராய்கின்றபோது தொல்காப்பியத்தில் கிளைமொழி வழக்குகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள ஏற்புகள் மூலமாக தொல்காப்பியர் தமிழ்மொழிக்கான இலக்கண படைப்பினை சமுதாய மொழியியல் கண்ணோட்டத்திலுமே அணுகியுள்ளார் என்பதனை நிறுவ முடிந்துள்ளது.

## உசாத்துணை நூல்கள்

கந்தசாமி தேவநேயபாவாணர், 2001, தொல்காப்பியம் – சொல்லதிகாரம், சேனாவரையருரை, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்பு கழக வெளியீடு, திருநெல்வேலி.
சீனிவாசசர்மா. கோ, 1992, கிளை மொழியியல், அனைத்திந்திய தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.
முத்துச்சண்முகம், 2009, இக்கால மொழியியல், முல்லை நிலையம், தி.நகர், சென்னை.
முரளிதரன். இரா, அருள்ராஜ். வே. சா, சாவித்திரி. சி, 2010, "தமிழ் இலக்கண போக்குகள்", தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
லாறன்ஸ். செ. ஜீன், 2001, தொல்காப்பிய இலக்கண மொழியில் கோட்பாடுகள், கருத்தரங்க கட்டுரைகள், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.